**நாள்**: 12.11.2025

O.S. No. 48/2022

**வா.சா.2**

**பெயர்: மோகனசுந்தரம் , த/பெ. ஜெயராமன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இவ்வழக்கில் வா.சா. 1 ஆக சாட்சியம் அளித்துள்ள ஆனந்தகிருஷ்ணன் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். வா.சா. 1 குறுக்கு விசாரணையின் போது சாட்சி சொல்லியுள்ள குறைபாடுகளை சரிசெய்ய என் தரப்பில் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் செய்யபட்டுள்ளது என்றால் அது குறித்து தெரியாது. என் சகோதரர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் மேற்படி வா.சா. 1 சாட்சியத்தில் படித்து பார்த்து அதில் கண்டுள்ள வாசகங்களை என் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கில் 5 ம் வாதியாக சாட்சியம் அளிக்கிறேனா அல்லது வாதிகள் தரப்புக்கு சாட்சியம் அளிக்கிறேனா என்றால் எல்லார்காகவும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//மேற்படியார் தரப்பில் இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.11.12 18:05:48 +0530